பிராந்திய ஆவணப்படுத்தல் **- திருகோணமலை**
ஆண்டறிக்கை **2024**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | திருகோணமலை மாவட்டத்தினை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2023/0001 |
| செயற்றிட்ட இடம் | திருகோணமலை |
| செயற்றிட்டக் காலம் | மார்ச் 2023 - செப்ரம்பர்2024 |
| அறிக்கையிடல் காலம் | ஜனவரி 2024 - டிசம்பர் 2024 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | ரமணிதரன் கந்தையா |
| முக்கிய பங்குத்தாரர்கள் | ரமணிதரன் கந்தையா , எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 634,256 ரூபா |

இலங்கையில் முக்கிய மாவட்டமாக கருதப்படும் அதே சமயம் பூகோள ரீதியிலும் முக்கிய பிரதேசமாக கருதப்படும் திருக்கோணமலை மாவட்டம் தமிழர்களின் வரலாற்றில் நீண்ட தொடர்ச்சியை கொண்ட ஒரு மாவட்டமாக காணப்படுவதுடன், வடக்குக் கிழக்கு இணைப்பின் தொடுப்பு புள்ளியாகவும், தமிழர் தரப்பை பொறுத்தவரை பிரதான முக்கியத்துவம் உடைய மாவட்டமாகவும் உள்ளது. இந்த மாவட்டத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் அண்ணளவாக எண்ணிக்கையில் சம நிலையை அண்மை காலங்களில் அடைந்துள்ளனர். எனினும் மாவட்டத்தின் பல பகுதிகளில் தமிழர் சார் வரலாற்றுச் சுவடுகளும், ஆவணப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்களும் காணப்படுகின்றது. முக்கியமாக தென்னவன் மரபு அடி தொடக்கம் வெருகல் வரை ஒவ்வொரு கிராமங்களும் வரலாற்றுக்கு முந்திய, வரலாற்றுக்குப் பிந்திய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை கொண்டுள்ளது. பாரம்பரிய பழக்கவழக்கங்கள், கலைகள், இலக்கியங்கள், பிரதேச முக்கியத்துவம் என பல விடயங்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் நூலக நிறுவனம் திருக்கோணமலை மாவட்டத்தில் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை எழுத்து மூலம், அச்சு மூலம் உள்ள நூல்கள் தொடக்கம், பல்வேறுபட்ட பல்லூடக ஆவணங்களையும் ஆவணப்படுத்தி வருகின்றது.

இலக்குகள்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே திருகோணமலை மாவட்டமும், அங்கு வாழும் மக்களும் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டுவருதல்.
- திருகோணமலை பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணைய வெளியில் உருவாக்குதல்.

நோக்கம்

- இச்செயற்றிட்டத்தின் கீழ் 1,080 ஆவணங்கள் 108 ஆளுமைக்குறிப்புகள், 120 நிறுவனக்குறிப்புகள், 240 புகைப்படங்கள் , 480 குறுங்கால ஆவணங்கள் மற்றும் பிராந்தியம் சார் நிகழ்வுகளை ஆவணப்படுத்தல்

அடைவுகள்

- 2023 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் 618 ஆவணங்கள், 20 வாய்மொழி வரலாறுகள் , 324 புகைப்படங்கள் , 507 துண்டுப்பிரசுரங்கள், 108 அழைப்பிதழ்கள் , 50 ஆளுமைக்குறிப்புகள் மற்றும் 54 நிறுவனக்குறிப்புகள் என்பன ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**2024** ஆம் ஆண்டின் அடைவுகள்

| அடைவுகள் | அடைவுமட்டம் |
|---|---|
| ஆவணங்கள் | 495 |
| வாய்மொழி வரலாறுகள் | 30 |
| புகைப்படங்கள் | 169 |
| குறுங்கால ஆவணகம் | 203 |
| ஆளுமைக் குறிப்புகள் | 59 |
| நிறுவனக்குறிப்புகள் | 43 |
| நிகழ்வுகளை பதிவிடல் | 13 |
| பன்முகத்தன்மையடிப்படையிலான ஆவணங்கள் | 121 |

- மொத்தமாக இதுவரை இச்செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை பிராந்தியம் சார்ந்து 1095 ஆவணங்களும் , 50 வாய்மொழி வரலாறுகளும் , 493 புகைப்படங்களும் , 818 குறுங்கால ஆவணங்களும் , 97

நிறுவனக்குறிப்புகளும் , 109 ஆளுமைக்குறிப்புகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

முழுமைப்படுத்தப்பட்ட சேகரங்கள்

- இச்செயற்றிட்டத்தின் கீழ் 2012 ஆண்டு முதல் வெளிவந்த மலைமுரசு எனும் வாராந்தப்பத்திரிகையானது அதனது 180 பதிப்புக்களும் முழுமையாக பெறப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

  மலை முரசு

- யோகானந்தன், கனகசூரியம் (சம்பூர் தாஸன்) அவர்கள் இதுவரை எழுதிய கட்டுரை மற்றும் கவிதை சார் நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டு அவரது ஆளுமைக்குறிப்பு மற்றும் வாய்மொழி வரலாறு என்பவை பெறப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

  யோகானந்தன், கனகசூரியம்

- திருகோணமகையில் புகழ்பெற்ற இலக்கிய ஆளுமை பேரம்பலம் கனகரத்தினம் (ஷெல்லிதாசன்) அவர்களது ஆறு ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு வாய்மொழி வரலாறு பெறப்பட்டு ஆளுமைக்குறிப்பு எழுதப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

  பேரம்பலம் கனகரத்தினம்

- சண்முகம் அருளானந்தம் (கேணிப்பித்தன்) இலங்கை அரசு கலாபூஷணம் எனும் விருதைப்பெற்றுள்ள எழுத்தாளராவார் இதுவரை இவரது 106 நூல்களில் 60 நூல்கள் அடையாளப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன் வாய்மொழி வரலாறு மற்றும் ஆளுமைக்குறிப்புகள் என்பனவும் எழுதப்பட்டுள்ளன.

  சண்முகம் அருளானந்தம்

அடையாளங்காணப்பட்ட சேகரங்கள்

- ஶ்ரீ ஷண்முகா தர்மஸ்தாபனம் திருக்கோணமலையில் பல்வேறுபட்ட பணிகளை செய்த ஒரு நிறுவனம் ஆகும். இது தொடர்பான நிறுவனங்கள், ஆவணங்கள், ஆளுமைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். இவற்றை ஆவணப்படுத்துவதன் மூலம் திருக்கோணமலையின் வரலாற்றை 1900 ஆண்டுகளில் இருந்து கோவைப்படுத்த முடியும்.

- திருக்கோணமலை சாம்பல்தீவை சேர்ந்த அமரர் தம்பிராசா அவர்கள் வரலாற்று சேகரிப்பு, ஆவணப்படுத்தல் தொடர்பில் 1950 தொடக்கம் 2000 வரை செயற்பட்ட ஒருவர். இவரது சேகரிப்புகளை ஆவணப்படுத்துவதன்

மூலம் சாம்பல்தீவு, குச்சவெளி பிரதேச வரலாற்றை இனங்கண்டு ஆவணப்படுத்தல்.

- தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பாடசாலை திருக்கோணமலையின் மிக நீண்ட வரலாற்றை கொண்ட ஒரு பாடசாலை. இந்த பாடசாலையால் உள்ளக்கமலம், திராணி ஆகிய பாடசாலை மலர்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளது. அவ்வாறே நவராத்திரி காலப்பகுதியில் "சாரதை" என்ற நூலும் வெளியிடப்பட்டு வந்துள்ளது. மேலும் பழைய மாணவர் சங்கத்தால் "சாரல்" என்று வெளியிடும் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றை ஆண்டு வாரியாக ஆவணப்படுத்துவதன் மூலம் தொகுப்பு ஒன்றை மேற்கொள்ளலாம்.

- திருக்கோணமலை மாவட்டத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி வரலாறு மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளின் வருகையுடன் ஆரம்பித்தது. 1819 காலப்பகுதியில் மெதடிஸ்த மிஷன் பாடசாலைகள் திருக்கோணமலையில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அவை கிறிஸ்தவ பாடசாலைகளாக நடத்தப்பட்டது. 2019 காலத்தில் மெதடிஸ்த மிஷனின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "Light to the East" என்னும் நூல் திருக்கோணமலையை மையப்படுத்தி வெளியிடப்பட்டது. இந்த நூலை வழிகாட்டியாக கொண்டு மெதடிஸ்த மிஷன் ஊடாக ஆவணங்களை சேகரிக்கும் பொழுது கல்வி வரலாறு மற்றும் திருக்கோணமலை சார்ந்த வரலாற்று விடயங்களை ஆவணப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புள்ளது. இது தொடர்பில் இந்நூலில் எழுத்தாளர் "Jerome Rasiah" ஊடாக இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- செயற்றிடத்திற்கான தொடர்சியான நிதியினை பெற்றுக்கொள்வதில் உள்ள சவால்கள் - திருகோணமலை பிராந்தியத்தில் காணப்படும் ஆளுமைகள் மற்றும் செயற்றிட்ட வள நன்கொடையாளர்களை தொடர்பு கொண்டு கலந்துரையாடல்.
- ஆய்வினை அடிப்படைக் கண்ணோட்டத்தில் செயற்றிட்டத்தினை முன்னெடுத்துச் செல்லக்கூடிய கள ஆய்வாளரை இனங்காணல்.

பின்னிணைப்பு

[திருகோணமலை ஆவணகம்]